சிறைக் கைதிகளுக்கு ஊதியம்.

*632 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயிலில் வேலை செய்யும் கைதிகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்கான திட்டம் தமிழ்நாடு அரசின பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தற்பொழுது திறந்த வெளிச் சிறைகளில் வேலை செய்யும் கைதிகள் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 25 காசுகள் ஊதியம் கொடுக்கப்படுகிறது. சிறைச்சாலைகளிலேயே வேலை செய்யும் கைதிகள் ஊதியம் ஈட்டிடும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state when this scheme would be implemented for other prisoners who are being taken outside Central Jail for work in the Transport Department and other departments?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதைக்கு அதை அமல் நடத்துவதாக இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, இப்பொழுது இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் கைதிகளுக்குத் தேவையானவற்றைச் சிறையிலேயே வாங்கிக்கொள்ள அரசு ஏற்பாடு செய்ய முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதே தேவையானவற்றை அவர்கள் வாங்கிக்கொள்ள வசதியிருக்கிறது. கூலி கொடுத்துத்தான் செய்ய வேண்டும் என்பதில்லை.

திரு. பி. வேலுசாமி: தலைவர் அவர்களே, கைதிகளில் திருந்தினவர்கள், திருத்தப்படாதவர்கள் என்று இருப்பவர்களைத் தனித்தனியாக வைத்து திருந்தினவர்களுக்குச் சலுகை கொடுக்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விதிமுறைகளின்படி, நல்லவர்கள் என்று திருந்தியவர்களுக்கு மார்க்குகள் கொடுக்கிறார்கள். அடையாளச் சின்னங்களும் கொடுக்கிறார்கள். எந்த எந்த வசதிகளைச் செய்ய முடியுமோ, அவற்றைச் செய்து, விடுதலை செய்வதில்கூட நல்லவர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்படுகிறது.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கைதிகளில் திருந்தியவர்கள், ஜன்ம தண்டனை அடைந்தவர்கள், 10 12 ஆண்டுகளானால், அவர்களை விடுதலை செய்ய உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 9, 10 ஆண்டு கழித்தால், அங்கேயிருக்கும் அட்வைசரி போர்டு சிபாரிசு செய்தால், அரசாங்கம் அப்படிப்பட்டவர்களை விடுதலை செய்கிறார்கள்.

கடையனோடைக் கிராமத்துக்குப் பேருந்துப் பணி.

*633 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள தெந்திருப்பேறை கிராமத்திலிருந்து நாங்குநேரிக்குச் செல்லும் தனியார் பேருந்தை கடயனோடை கிராமம் வரைக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்சமயம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.